# வெளியனுப்பப்பட்டு இடர்களுக்கு வெளிப்படுத்தப்படுவோர்

## சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தில் இலங்கை வீட்டுப் பணிப்பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்கள்

### 1. சாராம்சம்

*அதிகாலை 3.30 மணிக்க நான் படுக்கைக்குச் சென்றாலும் காலை 5.30 மணிக்கு நான் எழும்ப வேண்டும்.... நள்ளிரவு 1.00 மணிவரை சில சமயம் அதிகாலை 3.00 மணிவரை தொடர்ச்சியாக எனக்கு வேலை இருக்கும். ஒரு தடவை நான் எனது எஜமானியிடம் ''உங்களைப் போலவே நானும் ஓர் மனுஷி, எனக்கும் ஒரு மணித்தியாலமாவது ஓய்வு தேவை'' எனக் கூறினேன். அதற்கு அவர் '' நீ இங்கே வேலை செய்ய வந்திருக்கிறாய்; நீ எனது காலணிகளைப் போன்றவள், ஓய்வில்லாமல் நீ உழைக்க வேண்டும்'', என என்னிடம் கூறினார்.*

*நிலைமைகள் மோசமடைந்தன. நான் வேலையை விட்டு விலக விரும்புவதாக எஜமானியிடம் கூறினேன். ஆனால் அவரோ என்னை முகவரிடம் அழைத்துச் செல்லவில்லை...(அவரது கணவன்) ''நீ போகப் போகின்றாயா, நீ போகப் போகின்றாயா?'' எனக் கேட்டு எனது தலைமயிரைப் பிடித்து இழுத்துத் தன் கைகளால் என்னை அடித்தான். அவன் சமையலறைக்குள் சென்று ஓர் கத்தியை எடுத்த வந்து என்னைக் கொன்று சிறு துண்டுகளாக வெட்டி அவற்றை ஓர் அலுமாரியில் போட்டு விடப்போவதாக மிரட்டினான்... இந்த வேளையில் அவர்கள் எனக்கு நான்கு மாத சம்பளப் பாக்கி வேறு தரவேண்டியிருந்தது......*

*இங்கு மேலும் மேலும் அப்பாவிப் பெண்கள் வெளிநாடு போகின்றனர். அத்துடன் போவதற்கும் திட்டமிட்டிருக்கின்றனர். இது பெண்கள் தங்களின் பாதுகாப்பைத் தாங்களே கையாளவேண்டிய நிலைக்கு ஆளாக்குகிறது. இலங்கை அரசாங்கம் எங்கள் மூலம் நல்ல இலாபத்தை பெறுகிறது. எங்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.*

- குமாரி இந்துநில், 23 வயது, குவைத்தில் பணியாற்றிய முன்னாள் வீட்டுப் பணிப்பெண் -

தங்களுக்கும், தங்கள் குடும்பத்துக்கும் ஆதரவளிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையுடனும், வீட்டில் ஒரு சில பயனுள்ள வழிகளையுமே கொண்ட 125,000க்கும் அதிகமான இலங்கைப் பெண்கள் ஒவ்வொரு வருடமும் வீட்டுப்பணியாளர்களாக மத்திய கிழக்கிற்குப் புலம்பெயர்கின்றனர். அவர்களது வருமானம் இலங்கைப் பொருளாதாரத்திற்குக் கணிசமானதோர் பங்களிப்பை வழங்குகிறது. இருந்தும் பல புலம்பெயரும் பெண்கள் பெரும் சொந்தச் செலவிலேயே தொடர்ந்தும் இந்த உபாயத்தைக் கைக்கொண்டு வருகின்றனர்.

இலங்கையிலுள்ள நேர்மையற்ற தொழில் முகவர்கள் மற்றும் துணை முகவர்கள் அதிகளவில் சட்டவிரோதமான, மிக அதிகமான ஆட்சேர்ப்புக் கட்டணங்களை அறவிடுவதுடன் பெண்களை அவர்களது எதிர்பார்க்கும் தொழில் குறித்தும் ஏமாற்றுகிறார்கள். சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தில் தொழிற் சட்டங்கள் வீட்டுப் பணியாளர்களை உள்ளடக்கவில்லை, அவர்கள் தங்கள் பணிபுரியும் இடங்களிலேயே அடைபட்டவர்களாக சிறிய வேதனத்திற்காக நீண்ட மணித்தியாலங்கள் அதிக வேலை செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். சில சந்தர்ப்பங்களில், வேலை கொள்வோர் அல்லது தொழில் முகவர்கள் இவ்வீட்டுப் பணியாளர்களை உடல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் அல்லது கட்டாய வேலை செய்தல் என்பவற்றுக்கு ஆளாக்குகின்றனர். தற்பொழுதுள்ள எண்ணிக்கைகள் துஷ்பிரயோகங்களின் அளவைக் குறைத்து மதிப்பிடுகையில், இலங்கை அரசாங்கமோ புலம்பெயர்ந்து சென்ற வீட்டுப் பணிப்பெண்களில் இடர்ப்பட்டு 50 பேர்களாவது நாளாந்தம் திரும்பி வருவதாகவும் மற்றும் வெளிநாட்டிலுள்ள தூதுவராலயங்கள் வேதனம் வழங்காமை, பாலியல் தொந்தரவுகள் மற்றும் அதிக வேலைப்பளு போன்ற முறைப் பாடுகளுடன் இப்பணியாளர்களால் நிரம்பி வழிவதாகவும் அறிவிக்கிறது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் இச்சுரண்டல் இரகசியமானதொன்றல்ல. இப் பிராந்தியத்திலுள்ள ஊடகங்கள் கொடூரமான துஷ்பிரயோகங்கள் குறித்தான செய்திகளை அடிக்கடி வெளியிடுகின்றன. ‘‘சித்திரவதையின் கதை சொல்லும் உடைந்த விரலும், மணிக்கட்டெலும்பும்’’, ‘‘ருசியற்ற உணவை சமைத்ததற்காக இலங்கைப் பணிப்பெண்ணுக்கு கையில் சூடு’’, ‘‘சோம்பேறித்தனமாக இருந்தமைக்குப் பணிப்பெண் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை’’, மற்றும் ‘‘இலங்கைப் பணிப்பெண் வளர்ப்புப் பூனையின் உணவை உண்ண நிர்ப்பந்திக்கப்பட்டார்’’, போன்ற செய்தித் தலைப்புக்களை இந்தச் செய்தி அறிக்கைகள் கொண்டுள்ளன. [1]

இப்படியானதோர் விழிப்புணர்வு உள்ளபோதும், இலங்கை அரசாங்கம், சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பன இப்பணியாளர்களைப் பாதுகாப்பதற்கு ஓர் சாதாரண தரத்திலான தொழில் பாதுகாப்பைக் கூட வழங்கத் தவறியுள்ளன. போட்டித் தன்மையும், ஊழலும் நிறைந்த ஆட்சேர்ப்புத் துறையில் இலங்கை இன்னமும் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் துஷ்பிரயோகத்திற்குள்ளான பணிப் பெண்களுக்கு ஓர் போதுமான உதவியளிக்கும் சேவைகளை அல்லது முறையிடுவதற் கானதோர் வினைத்திறனான பொறிமுறையை உருவாக்கவில்லை. ஓய்வு நாட்கள், வேலை செய்யும் நேரங்கள் மீதான வரையறைகள் மற்றும் சில நாடுகளில் ஓர் குறைந்தபட்ச வேதனம் உட்பட ஏனைய அனைத்து ஊழியர்களும் அனுபவிக்கும் உத்தரவாதங்களை இந்த வேலை கொள்ளும் நாடுகள் நிறைவேற்றாமல் இருந்தன.

----------------------------------------------------------------------

[1] மிராஜ் ரிஸ்வி, ‘‘சித்திரவதையின் கதை சொல்லும் உடைந்த விரலும் மணிக்கட்டெலும்பும்’’, கஹாலிஜ் டைம்ஸ் (டுபாய், ஐ.அ.இ) ஒக்டோபர் 11, 2004. http://www.khaleejtimes.com/DisplayArticle.asp?section=theuae&xfile=data/theuae/2004/october/theyae_october218.xml (பார்வையிட்டது செப்டெம்பர் 6,2007); டெபஸ்ரீ S., ‘‘ருசியற்ற உணவைச் சமைத்ததற்காக இலங்கைப் பணிப்பெண்ணுக்கு கையில் சூடு’’, கஹாலித் டைம்ஸ் (டுபாய், ஐ.அ.இ) ஆகஸ்ட் 18, 2004. http://www.khaleejtimes.com\DisplayArticleNew.asp?section=theuae&xfile=data/theuae/2004/august/theuae_august408.xml (பார்வையிட்டது செப்டெம்பர் 6, 2007); அலிஹுஃவாஷ், ‘‘சோம்பேறித்தனமாக இருந்தமைக்கு பணிப்பெண் சித்திரவதை செய்யப்பட்டு கொலை’’, அரபுச் செய்திகள் (ஜெட்டா, சவூதி அரேபியா) ஜுன் 8, 2007. http://www.arabnews.comÆ?page=1&section=O&article=97227&d=8&m=6&y=2007&pix=kingdom.jpg&category=kingdom (பார்வையிட்டது செப்டெம்பர் 6, 2007); ‘‘இலங்கைப் பணிப்பெண் வளர்ப்புப் பூனையின் உணவை உண்ண நிர்ப்பந்திக்கப்பட்டார்’’, டெய்லி நியூஸ் (கொழும்பு, இலங்கை), ஜுன் 19, 2007. http://www.dailynews.lk/2007/06/19/main_News.asp (பார்வையிடப்பட்டது ஜுன் 19, 2007).

தொழிலாளர்கள் புலம்பெயர்வு இலங்கைக்குப் பெருமளவில் இலாபகரமானது. 2006இல், இலங்கையின் இந்த இடம் மாறிச் செல்லும் தொழிலாளர்கள் நாட்டிற்கு 2.33 பில்லியன் அமெரிக்க டொலர்களை அனுப்பி வைத்துள்ளனர் - இது மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட 9% அதிகமானதுடன் நாடு பெற்றுக் கொண்ட வெளிநாட்டு உதவி மற்றும் நேரடியான வெளிநாட்டு முதலீடுகள் இணைந்த தொகையை விட 526 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகமானதாகும். தற்போது உள் அனுப்பும் தொகையானது தைத்த ஆடைகள் ஏற்றுமதிக்கு அடுத்து இரண்டாவது பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலை ஏற்றுமதியை விடக் கூடுதலானதோர் வருமானம் ஈட்டும் தோற்றுவாயாக உள்ளது. தொழிலாளர் புலம்பெயர்வு இலங்கையில் வேலையில்லாமைப் பிரச்சினையைத் தணிப்பதுடன் நாட்டிற்கான முக்கியமானதோர் அந்நியச் செலாவணியை ஈட்டும் வளமாகச் செயற்படுகிறது. இலங்கையின் மொத்த உள் அனுப்பும் தொகையில் புலம்பெயர் பணிப்பெண்கள் 60 வீதத்திற்கும் மேல் பங்களிக்கின்றனர்.

வறுமைக் குறைப்புக்கான இலங்கை அரசாங்கத்தின் உபாயங்கள் மற்றும் அதன் வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு உள் அனுப்பும் தொகைகள் முக்கியமானவையாதலால் இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை முன்னேற்றும் ஓர் கொள்கையைத் தீவிரமாக அனுசரிக்கிறது. கீழே விளக்கப்பட்டுள்ள அண்மைய சீர்திருத்தங்களை விட, இக் கொள்கைகள் அதிகம் ஓர் மனிதத்துவ அம்சம் இல்லாமல், மனித உரிமைகள் பாதுகாப்பில் குறைபாடுடைய ஆனால் வேலையாட்களுக்குக் கேள்வி அதிகமுள்ள செல்வந்த, எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு இப்புலம்பெயர் பெண்களை ஓர் ஏற்றுமதிப் பொருளாகக் கருதி சந்தைப்படுத்துகிறது. இலங்கையிலுள்ள புலம்பெயர்வோர் உரிமைகளுக்கான அமைப்புக்கள் புலம்பெயர் பணியாளர்களுக்கான இலங்கையின் அணுகுமுறையை "பொருட்கள் வழங்கும் அணுகுமுறை" எனக் குறிப்பிடுகின்றன. இவ்வணுகுமுறை "தெரிவு செய்தல், பயிற்சியளித்தல், பொதியிடல், காப்புறுதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல்" எனும் சூத்திரத்திற்கமைவான இயல்புடன் பணியாளர்களின் பாதுகாப்பு எனும் முக்கிய அம்சம் இல்லாது காணப்படுகிறது.

புலம்பெயர்தல் நம்பிக்கை அளிக்கக் கூடியதாகவும் அதேநேரம் கஷ்டங்களுக்கான வாய்ப்புக்கள் உள்ளதாக இருவிதங்களிலும் உள்ளதுடன் புலம்பெயர் பெண்களும் சுபிட்சநிலை மற்றும் துஷ்பிரயோகங்கள் ஆகிய இரண்டையும் அனுபவித்துள்ளனர். இங்கு வீட்டில் சராசரி ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தைப் பராமரிக்கும் பெண் பணியாளர்கள் இலங்கையில் உழைப்பதைப் போன்று ஓர் பத்து மடங்கு அதிகம் உழைக்க முடியும் எனும் ஓர் மாய நம்பிக்கையில் புலம் பெயர்கின்றனர். வெளிநாட்டில் உழைக்கும் வேதனத்தில் புலம்பெயர் பணியாளர்கள் வீடுகளைக் கட்டியுள்ளார்கள், வியாபார முயற்சிகளை ஆரம்பித்துள்ளார்கள், குடும்பத்தின் மூத்த உறவினர்களைப் பராமரித்திருக்கிறார்கள் மற்றும் பிள்ளைகளது பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள் என்பவற்றையும் வாங்கியுள்ளார்கள். அநேகமான புலம் பெயர் வீட்டுப் பெண் பணியாளர்கள் அவர்களது குடும்பத்தின் பிரதான வருமானம் ஈட்டுபவராக மாறியுள்ளதுடன், அவர்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பிய பின்னர் அவர்களது குடும்பம் மற்றும் சமூகத்தில் கூடுதலான அந்தஸ்தை ஈட்டிக் குடும்பத்தில் தீர்மானம் எடுக்கும் கூடுதலான அதிகாரம் மற்றும் குடும்ப வளங்களில் ஓர் கட்டுப்பாட்டையும் அனுபவிக்கின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகள் அண்மைய வருடங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளதுடன் வெளிச் செல்லும் புலம்பெயர் பணியாளர்களை முகாமைப்படுத்துவதற்கு முக்கியமான படிமுறைகளை முன்னெடுத்ததற்கும்

பாதுகாப்புக்களை வழங்க ஆரம்பித்ததற்கும் அவை பாராட்டப்பட வேண்டியவையாகும். இலங்கை அரசாங்கம் 1985 இல் பணியாளர்கள் சட்டபூர்வமான வழிகளினூடாகப் புலம்பெயர்வதை உறுதி செய்யவும், ஆட்சேர்ப்பு முகவர்களினாலான ஊழல் மற்றும் சுரண்டல்களைக் குறைப்பதற்கும் மற்றும் பணியாளர்களது உள் அனுப்பும் தொகைகளின் பாய்ச்சலிற்கு வசதியளிக்கும் விதமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் எனும் நிறுவன ரீதியான அமைப்பொன்றை உருவாக்கியது. இருப்பினும் பாதுகாப்பில் கணிசமான இடைவெளிகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இலங்கைப் பெண்களின் தொழில் ரீதியான புலம்பெயர்தலுக்காக அபிவிருத்தி செய்யப்பட்ட புலம்பெயர் தொழில் துறையானது இத்துறையின் வருங்கால வீட்டுப் பணியாளர்களை பின்னொரு நேரத்தில் துஷ்பிரயோக அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கும் விதத்திலான ஒழுங்கீனங்களால் நிறைந்து காணப்படுகிறது. நேர்மையற்ற தொழில் முகவர்கள் மற்றும் அனுமதிப் பத்திரமற்றதும் மற்றும் கட்டுப்பாடுகளின்றிய உதவி முகவர்கள் புலம்பெயர்ந்து சென்று வீட்டுப் பணியாளாக வேலை பார்க்க எதிர்பார்க்கும் பெண்களிடம் வேலைப் பதிவுச் சேவைகள் மற்றும் ஏனைய புலம்பெயர்தல் தொடர்பான செலவுகளுக்கென உத்தியோக பூர்வமாக அனுமதிக்கப்பட்ட கட்டண வீதங்களை விட மூன்று அல்லது நான்கு மடங்கு கட்டணங்களைச் சட்டவிரோதமாக அறவிடுகின்றனர். இவ்வீட்டுப் பணியாளர்களில் அநேகர் இந்தக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக அநியாய வட்டிக்கு கடன்களைப் பெற்று பெரும் கடனாளியாகின்றனர். இச்சுமை அவர்கள் துஷ்பிரயோகங்களிற்கு முகம் கொடுக்கையில் வீட்டுப் பணியாளர்களது தெரிவை மட்டுப்படுத்துகிறது. தொழில் முகவர்கள் மற்றும் உதவி முகவர்கள் வேலை செய்யப் போகும் இடம், அவர்களது தொழில் நிபந்தனைகள் மற்றும் அவர்கள் பெறப்போகும் வேதனம் போன்ற விடயங்களில் இப்பணிப்பெண்களை அதிகம் ஏமாற்றுகின்றனர். இந்த ஏமாற்று ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மத்திய கிழக்கிற்குப் புலம் பெயர்ந்த பின்னர் வீட்டுப் பணிப்பெண்கள் சுரண்டப்படுவதற்கான அபாயத்திற்குட்படுத்துகிறது.

உழைப்போர் படையில் புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்களே மிகக் குறைந்த பாதுகாப்பைக் கொண்டிருக்கின்றனர். அவர்கள், ஒழுங்குபடுத்தப்படாததும், குறைத்து மதிப்பிடப்படும் ஓர் தொழில்துறையில் பணிபுரிவதுடன் அவர்கள் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டலிற்கான கூடுதல் அபாயத்தில் உள்ளனர். சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தில் இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் பலவிதமான துஷ்பிரயோகங்கள் மற்றும் பல வகையான சுரண்டல்களுக்கு, இவற்றில் அநேகம் பால்நிலை குறித்தானவற்றிற்கு முகம் கொடுக்கின்றனர். பணிசெய்யும் இடங்களில் அவர்கள் சாதாரணமான அளவுக்கதிகமான நீண்ட மணித்தியாலங்கள் பணிபுரிவது, ஓய்வு நாட்கள் இல்லாதிருப்பது, அவர்களைப் போன்று புலம் பெயர்ந்து வந்து ஆண் பணியாளர்களை விட குறைந்த வருமானத்தை ஈட்டுவது உட்பட பாரபட்சமான வேதனக் கொடுப்பனவுகள் போன்ற மோசமான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றனர். உழைப்பைப் பெற்றுக் கொள்ளும் இந்த நான்கு நாடுகளில், இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் உடல் ரீதியாக, உள ரீதியாக துன்பப்படுவதுடன் பாலியல் துஷ்பிரயோகம்; வேதனக் கொடுப்பனவின்மை; உணவு கொடுக்காமை; அவர்களது அடையாள ஆவணங்களைப் பறித்து வைத்தல்; வேலைத்தலங்களில் பலவந்தமாக அடைத்து வைத்தல்; மற்றும் அவர்கள் விரும்பிய பொழுது தங்களது தாய்நாட்டிற்கு திரும்பிச் செல்லும் அவர்களது விருப்பத்தில் மட்டுப்பாடுகள் இடல் போன்றவற்றினாலும் துன்பப்படுகின்றனர். சில சமயங்களில் இவைகள் இணைந்த மோசமான வேலைத்தல துஷ்பிரயோகங்கள் பணிப்பெண்களை பலவந்தமான வேலைக்குள் அகப்பட்டுக் கொள்ளும் நிலைமைகளை உருவாக்குகின்றன.

மத்திய கிழக்கின் வேலை கொள்ளும் நாடுகள் புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்களை குறுகியகால ஒப்பந்தப் பணியாளர்களாக அனுமதித்து அவர்களுக்கு சில உரிமைகளுக்கே இணங்கியுள்ளன. சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும்

ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பவற்றின் தொழிற் சட்டங்கள் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களது பாதுகாப்பை முற்றாகவே உள்ளடக்கவில்லை. இந்நாடுகளின் அரசாங்கங்கள் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கு அவர்களது நாட்டுச் சட்டத்தின் கீழ் சமனான பாதுகாப்பை மறுதலிப்பதுடன், துஷ்பிரயோகச் சம்பவங்களாக இருப்பினும் கூட வேலை கொள்வோரிடமிருந்து மாறி வேறிடம் செல்லும் அவர்களது விருப்பினை மட்டுப்படுத்துகின்றன.

இந்தச் சட்டப் பாதுகாப்பின்மை மற்றும் நிவாரணத்தை நாடும் பொழுது சட்டத்தின் கீழ் சமனான உரிமைகளை நிலை நிறுத்துவதில் பெண்களிற்கான மட்டுப்பாடுகள் என்பன அவர்கள் அனுபவிக்கும் வன்முறைகளை அதிகரித்தன. தெளிவான சட்ட உரிமைகள் இல்லாது மற்றும் நடைமுறையிலிருக்கும் தொழிற் சட்டங்களின் பாதுகாப்பிலிருந்து விலக்கப் பட்டிருப்பதாலும் இந்த வீட்டுப் பணிப்பெண்கள் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல்களை அனுபவிக்கும் பொழுது அவர்களுக்குக் குறைந்த பாதுகாப்பே உள்ளது. துஷ்பிரயோகங்களை புரியும் வேலை கொள்வோரை அதற்குப் பொறுப்புக் கூறவைக்க அல்லது கொடுபடாத வேதனங்களை மீளப் பெறுவதற்காக அதிகாரிகளை நாடும் வீட்டுப் பணியாளர்கள் அநேகம் குறைந்தளவிலான அல்லது அறவேயில்லாத பாதுகாப்பையே பெறக் கூடியதாக இருப்பதுடன் நிவாரணங்களைப் பெறுவதில் எண்ணற்ற சட்ட மற்றும் நடைமுறைத் தடைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தங்கள் வேலை கொள்வோரிடமிருந்து மாறிச் செல்லும் விருப்பினை மட்டுப்படுத்தும் குடிவரவுக் கொள்கைகளில் அகப்பட்டுத் தவிக்கும் இவர்கள் எந்தப் பகுதியிலிருந்தும் உதவியைப் பெறமுடியாமல், அநேகமான புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் மோசமான பணிசெய்யும் நிலைமைகளிலிருந்து தப்பிக்க முடியாமல் தொடரும் துஷ்பிரயோகங்களை சகித்துக் கொள்ள வேண்டியதாகவுள்ளது.

நாட்டின் உள்@ர் நீதிச் செயல்முறைகளிலிருந்து பெரிதும் விலக்கப்பட்ட நிலையில், சில சமயங்களில் புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்கள் தாங்கள் பணிசெய்யும் நாட்டிலுள்ள தங்களது நாட்டின் தூதுவராலயங்களுக்கு உதவியை மிகவும் நாடி ஓடி வருகின்றனர். தங்களது வேலை கொள்வோரிடமிருந்து தப்பி ஓடிவரும் இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் அநேகம் இலங்கைத் தூதுவராலயங்களில் வசதிகளற்ற, அளவுக்கு மீறிய சனநெருக்கடியான நிலைமைகளுடன் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். நாங்கள் நேர்கண்ட பெண்கள், இலங்கைத் தூதுவராலய அதிகாரிகள் மோசமான உடல் ரீதியான துஷ்பிரயோகங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், வேதனக் கொடுப்பனவின்மை அல்லது சுரண்டப்படும் வேலைத்தல நிலைமைகளுடன் தங்களை அணுகும் வீட்டுப் பணிப்பெண்களுக்கு குறைந்தளவிலான உதவியையே அளிக்கின்றனர் அல்லது முற்றாக உதவுவதில்லை எனத் தெரிவித்தனர். இலங்கைக்குத் திரும்பும் பணிப்பெண்கள், முறைப்பாடுகளை பூர்த்தி செய்வதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கியதாகக் கூறினார்கள்.

இலங்கை சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பன அவர்களது சர்வதேச மனித உரிமைகள் உடன்பாடுகளினது கடப்பாடுகளை நிலைநாட்டத் தவறுகின்றன. வீட்டுப் பணிப்பெண்கள் புலம்பெயர்கையில் துஷ்பிரயோகங்களிற்கு ஆளாகும் நிலைமைகளைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் புலம்பெயர்ந்து செல்லவிருக்கும் வீட்டுப் பணிப்பெண்களுக்கு அவர்கள் புலம்பெயர்வதற்கு முன் அவர்களது உரிமைகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு மேலும் ஆவண செய்தல் வேண்டும். தொழில் முகவர்கள் மற்றும் துணை முகவர்களை கண்காணித்தும் மற்றும் கட்டுப்படுத்தியும், வீட்டுப் பணிப்பெண்களுக்கு முழு அளவிலான உதவியை நெருக்கடி நேரங்களின் போது தூதுவராலயங்களில் வழங்குதல் வேண்டும். அத்துடன் நிவாரணத்துக்கான பொறிமுறைகளையும் இலங்கை திரும்பியதும் வீட்டுப் பணிப்பெண்களுக்கு வழங்கப்படும் சேவைகளையும் அதிகரித்தல்

வேண்டும். வீட்டுப் பணியாளர்களாக வர எண்ணுபவர்களைப் பாதுகாப்பதிலும் நெருக்கடியான வேளைகளில் புலம்பெயர்ந்த பெண்களுக்கு உதவுவதிலும் இலங்கையின் இயல்தன்மையானது அதிகளவில் வேலை கொள்ளும் நாடுகளினது ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது. இலங்கை வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் வேலை கொள்ளும் நாடுகளுக்கிடையிலான அதிகரித்த ஒத்துழைப்பு கஷ்டத்திலுள்ள வீட்டுப் பணியாளர்களை காப்பாற்றுவதற்கான ஏற்பாடுகளுக்கு அவசியமானது. வினைத்திறனான முறைப்பாட்டுப் பொறிமுறையை உருவாக்குதல் மற்றும் பரஸ்பரம் அங்கீகரிக்கப்படும் ஒப்பந்தங்களை வரைந்து அமுல்படுத்துதல் என்பன உண்மையான பாதுகாப்பினை வழங்கும்.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த அறிக்கைக்காக இலங்கையில் ஒக்டோபர் மற்றும் நவம்பர் 2006 களிலும், சவூதி அரேபியாவில் நவம்பர் மற்றும் டிசம்பர் 2006 களிலும் தன் ஆய்வுகளை நடாத்தியதுடன் அன்றிலிருந்து எண்ணற்ற ஆதாரங்களுக்கான தோற்றுவாய்களுடன் தொடர்பு கொண்டிருந்தது. இந்த அறிக்கை புலம்பெயர்ந்த வீட்டுப் பெண்கள் 100 பேருடனான ஆழமான நேர்காணல்களின் அடிப்படையிலானதாகும். இலங்கையில், மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த 14 மாதங்களில் மத்திய கிழக்கிலிருந்து நாடு திரும்பிய 80 புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்களுடன் நேர்காணல்களை நடாத்தியது. இப்பெண்கள் சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் ஆகிய நாடுகளில் பணி புரிந்திருந்தனர். நேர்காணப்பட்ட இந்த 80 புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்களுள் முப்பத்தொன்பது பேர் மத்திய கிழக்கில் பஹ்ரெய்ன், கட்டார், ஓமான் மற்றும் ஜோர்டான் உட்பட ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றியிருந்தனர். மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கையில் புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்கள் அதிகளவில் நாடு திரும்பியிருந்த எட்டு மாவட்டங்களில் ஏழு மாவட்டங்களான: கொழும்பு, களுத்துறை, கேகாலை, குருணாகல், கம்பஹா, கண்டி மற்றும் காலி அதேபோன்று நுவரெலியா என்பவற்றில் தன் நேர்காணல்களை நடாத்தியது.

சவூதி அரேபியாவில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் புலம்பெயர்ந்து வந்த இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் 20 பேர்களுடன், அடிக்குறிப்பு மூலம் வெளிப்படுத்தியிருக்கும் குறிப்புக்களுடனான ஒரு சில விதிவிலக்குகளுடன் நேர்காணல்களை நடாத்தியது. இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீட்டுப் பணியாளர்களது பெயர்கள் அவர்களது அடையாளத்தின் இரகசியத் தன்மையை பேணுவதற்காக மாற்றப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கையில் அரசசார்பற்ற ஸ்தாபன செயற்பாட்டாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களான அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் சங்கம் (ALFEA) இன் தலைவர்கள் உட்பட, தொழிற் சங்கத் தலைவர்கள் மற்றும் தொழில் முகவர்கள், துணை முகவர்களையும் நேர்காணல் செய்தது. அத்துடன் நாம், இலங்கை வெளிநாட்டு வேலைப் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் உட்பட, அரச அதிகாரிகள், தொழில் அமைச்சு, வெளிநாட்டு அமைச்சின் தூதரகத் தொடர்புகள் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சட்ட உதவி மன்றம் போன்றவற்றையும் சந்தித்தோம். சவூதி அரேபியாவில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை தூதுவராலயத்தின் மூன்று அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதி அதிகாரிகள் ஆகியோருடனும் நேர்காணல்களை நடாத்தியதுடன் 12 தனிப்பட்டவர்கள் மற்றும் தொழில், சமூக நலன்புரி, வெளிநாட்டு விவகாரம், சிறை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உட்பட்ட சவூதி அரசாங்க அதிகாரிகளுடன் குழுநிலையிலான நேர்காணல்களையும் நடாத்தியது.

**முக்கியமான பரிந்துரைகள்**

இலங்கை, சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தின் அரசாங்கங்கள் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் புலம்பெயர்ந்து தங்களது மனித உரிமைகளுக்கான மதிப்பையும் கௌரவத்தையும் கொண்ட நிலைமைகளில் பணியாற்ற முடியுமென்பதை உறுதி செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளில் செயல்பட வேண்டும். மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பரிந்துரைகளின் மையக்கருக்களாகக் கருதக் கூடியவை கீழே தரப்பட்டுள்ளன. விபரமான மேலதிக பரிந்துரைகள் இவ்வறிக்கையின் ஈற்றில் வழங்கப்பட்டுள்ளது.

- இலங்கையில் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களது துஷ்பிரயோகங்களைத் தவிர்ப்பதற்கு ஆட்சேர்ப்பு செயல்முறைகளின் சீர்திருத்தம் அவசியமானது. இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE) தொழில் முகவர்கள் மற்றும் அவர்களது துணை முகவர்களைக் கண்காணிப்பதற்கு சுயாதீனமானதும் மற்றும் கிரமமானதுமான ஓர் பொறிமுறையை ஸ்தாபிப்பதுடன் தொழில் முகவர்கள் தங்களது துணை முகவர்களைப் பதிவு செய்ய வேண்டுவதுடன் துணை முகவர்களின் நடவடிக்கைகளுக்குத் தொழில் முகவர்களை பொறுப்பேற்பவர்களாக்குதல் வேண்டும்.

- புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் புலம்பெயரும் செயல்முறைகளின் ஒவ்வொரு கட்டத்திற்குமான தங்களது உரிமைகள் பற்றி அறிந்திருப்பின் அவர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்கள் அடிக்கடி நிகழாதவையாக இருக்கும். இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வீட்டுப் பணியாளர்களின் புறப்படுதலுக்கு முன்னதான அதன் தற்போதைய பயிற்சித் திட்டத்தினை உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அந்நிய நாட்டு மொழிப் பயிற்சிகளின் பகுதிகளை அதிகரிப்பதன் மூலமும் நிவாரணப் பொறிமுறைகள் பற்றி மேலும் விரிவான தகவல்களை வழங்குவதன் மூலமும் மேம்படுத்தல் வேண்டும். அத்துடன் அது புலம் பெயர எண்ணியுள்ளவர்களுக்கு தொழில் ஒப்பந்தங்களின் மாதிரிகளை வழங்குதல், புலம் பெயர எண்ணியுள்ளவர்களுக்கு ஆட்சேர்ப்பிற்கான கட்டணங்களின் சட்ட வரம்புகள் பற்றித் தகவலளித்தல், குறைந்த வட்டி வீதத்திலான கடன் வசதிகள் கிடைக்கும் தன்மை மற்றும் சட்ட விதிகளை மீறும் ஆட்சேர்ப்பு முகவர் மற்றும் துணை முகவர்களுக்கெதிராக முறைப்பாடுகளை மேற்கொள்ளும் பொறிமுறைகள் பற்றியவை என பொது விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்கள் வழங்குவதை விரிவுபடுத்தல் வேண்டும்.
- புலம்பெயர் பெண் பணியாளர்களது உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதுடன் அவை வேலை கொள்ளும் நாடுகளில் அமுல்படுத்தப்படல் வேண்டும். இலங்கை, சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் போன்ற நாடுகளின் அரசாங்கங்கள் பரஸ்பரம் அங்கீகரித்து நடைமுறைப்படுத்தக் கூடிய தொழில் ஒப்பந்தங்களையும் மற்றும் முறையிடும் பணியாளர்களுக்கு நிவாரணத்தை உறுதி செய்யும் பொறிமுறைகளையும் உருவாக்குவதற்கு ஒத்துழைத்தல் வேண்டும்.

- புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புக்களிலிருந்து விலக்கப்படல் கூடாது. சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பவற்றின் அரசாங்கங்கள் வீட்டுப் பணியாளர்களுக்கும் சமனான சட்டப் பாதுகாப்பை வழங்குவதற்கு ஏற்றவகையில் தேசிய தொழில் சட்டங்களைச் சீர்திருத்தி அமுல்படுத்தல் வேண்டும். சவூதி அரேபியா, குவைத் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தின் அரசாங்கங்கள் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களது நலன்களிற்கான பொறுப்புக்களை உட்துறை அமைச்சிலிருந்து தொழில் அமைச்சிற்கு மாற்றுதல் வேண்டும்.

- வீட்டுப் பணியாளர்கள், துஷ்பிரயோகங்கள் தொடர்ந்தும் இருக்காத வண்ணம் தங்களது வேலை கொள்வோரிடமிருந்து இலகுவாக விலகி மாறுவதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும். சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தின் அரசாங்கங்கள் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்து மாறிச் செல்வதற்கு வசதியளிக்கும் வகையில் குடிவரவுத் தொழில் அனுசரணைச் சட்டங்களில் சீர்திருத்தங்களை கொண்டுவரல் வேண்டும்.

- வீட்டுப் பணியாளர்களுக்கெதிராக துஷ்பிரயோகங்கள் நடைபெற்றால் அவற்றுக்கான நிவாரணங்களை உறுதி செய்யும் வகையில் வேலை கொள்ளும் நாடுகளில் சீர்திருத்தங்களுக்கான தேவை பெரிதும் உள்ளது. சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தின் அரசாங்கங்கள் பாலியல் துஷ்பிரயோகங்கள், உடல் ரீதியிலான துஷ்பிரயோகங்கள் மற்றும் தற்போதுள்ள தேசியச் சட்டங்களை மீறும் தொழில் உரிமைத் துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பான வேலை கொள்வோர் மீது வழக்குத் தொடரப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

- இலங்கைக்குத் திரும்பியதும் முறைப்பாடு செய்யும் பொறிமுறைகள் மற்றும் உளவதிர்ச்சிக்கான உளவள ஆலோசனைகள் போன்றவை உட்பட துஷ்பிரயோகங்களுக்கு முகம் கொடுத்த புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கான பாதுகாப்புக்களை இலங்கை அரசாங்கம் மேம்படுத்தல் வேண்டும். அத்துடன் சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பவற்றில் இலங்கைத் தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதி அலுவலகங்களின் சேவைகளையும் இலங்கை அரசாங்கம் மேம்படுத்துதல் வேண்டும். இச்சேவைகள் முறைப்பாடுகளைக் கையாளக்கூடிய பயிற்சி பெற்ற ஊழியர்கள் உள்ளமையை அதிகரித்தல், இருப்பிட வசதியளித்தல், வேலை கொள்வோரின் வீடுகளில் அடைபட்டுள்ள பணியாளர்களை விடுவிப்பதற்கு உள்@ர் அதிகாரிகளுடன் இணைந்து ஒத்துழைத்தல், தொழில் மற்றும குற்றவியல் முறைப்பாடுகளுடனான சட்ட உதவிகளை வழங்குதல் மற்றும் உடல் நலப் பராமரிப்பு மற்றும் உளவளத் துணைச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளித்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

# VI - முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

இலங்கை அரசாங்கம், இலங்கையின் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக முக்கியமான முயற்சிகளை எடுத்துள்ள போதிலும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டுவது போல அம்முயற்சிகள் போதியளவானவையல்ல என்பதுடன் அவை அவற்றின் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைவதை உறுதி செய்வதற்கு மேம்படுத்தப்பட்ட அமுல்படுத்தல்கள் மற்றும் விரிவாக்கங்களுடைய தேவையைக் கொண்டுள்ளது. வீட்டுப் பணியாளர்கள் தொழிலுக்காக புலம்பெயரும் பொழுது துஷ்பிரயோகங்களுக்குள்ளாகும் நிலைக்கு ஆளாகதிருப்பதை உறுதி செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் மேலும் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தில் நியாயமான வேதனம், மேலதிக நேரக் கொடுப்பனவு, வாராந்த ஓய்வு நாட்கள், நன்மைகள் மற்றும் பணியாளர் நட்டஈடு உட்பட்ட வீட்டுப் பணியாளர்களுக்கு தொழில் சட்டத்தின் சமனான பாதுகாப்பு வழங்குவதற்கு தொழிற் சட்டங்களில் அர்த்தமுள்ளதும் தாமதங்களுமின்றிய சீர்திருத்தம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றுக்கான அவசர தேவையொன்று உள்ளது. சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தின் அரசாங்கங்களும் தற்பொழுதுள்ள உள்@ர் குற்றவியல் சட்டங்களில் மேன்மையாகச் சொல்லப்பட்டிருக்கும் சட்டப் பாதுகாப்புக்களை அமுல்படுத்துவதுடன் வீட்டுப் பணியாளர்களுக்கான ஒப்பந்தங்களை ஒரே தன்மையானதாக்குவதுடன் சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களின் ஓர் தரப்பான இவ்வொவ்வொரு நாடுகளும் அவற்றை அமுல்படுத்துதலும் வேண்டும்.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் பின்வரும் பரிந்துரைகளைக் கூறுகிறது:

**இலங்கை அரசாங்கத்திற்கு:**

- **ஆட்சேர்ப்பு முகவர்கள் மற்றும் துணை முகவர்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தலை உறுதியாக்குதல்.**
    - தொழில் முகவர்கள் தங்களது துணை முகவர்களைப் பதிவு செய்ய வேண்டுதல்: துணை முகவர்களை அமர்த்தும் நடவடிக்கைகளுக்கு அவர்களையே பொறுப்பாக்குதல்.
    - துணை முகவர்கள் அரசாங்கத்தில் அல்லது அவர்களை அமர்த்தியிருக்கும் தொழில் முகவர்களிடம் பதிவு செய்ய வேண்டுதல்; துணை முகவர்களால் மேலதிகக் கட்டணங்கள் அறவிடப்படல் மற்றும் ஏமாற்றுதல் போன்றவற்றை குறைப்பதற்காக கட்டணங்களுக்கான நியமங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தெளிவாக வரையறை செய்தல்; மற்றும் விதிமுறைகளை மீறும் துணை முகவர்கள் நியாயமான தண்டனையை எதிர் கொள்வதை உறுதி செய்தல் போன்ற விடயங்கள் எனும் வழிமுறைகள் மூலம் நேரடியாக துணை முகவர்களைக் கட்டுப்படுத்தல்.
    - தொழில் முகவர்கள் மற்றும் துணை முகவர்கள் மீது கிரமமான மற்றும் சுயாதீனக் கண்காணிப்பு பொறிமுறையை ஸ்தாபித்தல். ஆட்சேர்ப்பு முகவர்கள் மீது முன்னறிவித்தல் இன்றி பரிசோதனைகளை நடாத்துதல்.

- தொழில் முகவர்கள் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களது தொழில் ஒப்பந்தத்தை முழுமையாக தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்வதனை உறுதிப்படுத்துதல்.

- புலம்பெயர்வதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு முகவர்கள் மற்றும் துணை முகவர்களுக்கு வீட்டுப் பணியாளர்கள் செலுத்திய கட்டணங்கள் பற்றி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அறிவிக்கும் ஓர் பொறிமுறையை ஸ்தாபித்தல்.

- வேலை கொள்ளும் நாடுகளில், தொழில் முகவர் நிறுவனங்களில் பணிபுரியும் இலங்கை நாட்டவர்கள் பற்றிய முறைப்பாடுகளை தீவிரமாக விசாரித்தறிந்து கொள்ளல். இவர்கள் பற்றிய தகவல்களை வீட்டுப் பணியாளர்கள் தாம் வேலை கொள்ளும் நாடுகளிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் இலங்கைக்கு நாடு திரும்பியதும் பதிவு செய்து கொள்வதனை அனுமதிக்கும் பொறிமுறைகளை உருவாக்கல்.

- **சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பவற்றின் இலங்கைத் தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அலுவலகங்களில் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கான சேவைகளை மேம்படுத்தல்.**

    - குறிப்பாக வேதனங்களைப் பெற்றுக் கொடுத்தல், துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விசாரித்து வழக்குத் தொடுத்தல் மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருக்கையில் உரிமைகள் தொடர்பாக உதவியை நாடும் பொழுது புலம்பெயர் வீட்டுப்பணியாளர்களுக்கு உதவும் வகையில் போதியளவிலான ஊழியர்களை பணிக்கமர்த்துதல்.

    - உளவளத்துணை சேவை வழங்கல் மற்றும் உடற்சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சனநெருக்கடியைக் குறைப்பதற்கான சேவைகளை வழங்குவதற்கான பயிற்சிகளை ஊழியர்களுக்கு வழங்குவதன் மூலம் தங்குமிடங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களில் நிலைமைகளை மேம்படுத்தல்.

    - வேலை கொள்ளும் நாடுகளிலுள்ள இலங்கை வெளிநாட்டுப் பணியகங்களில் பணியாளர்களுக்கு உதவுவதற்கான விசேட கருமபீடங்கள் மற்றும் விரைவான தொலைபேசிச் சேவைகளை வழங்கல்; சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தில் உடல்நலப் பராமரிப்பு உளவளத் துணைச்சேவை, தங்குமிடம் மற்றும் சட்ட உதவிகளுக்கான சிபார்சுகளை வழங்கல்.

    - சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பவற்றிலுள்ள இலங்கை வெளிநாட்டுப் பணியக ஊழியர்களுக்கு, ஓர் குற்றவியல் முறைப்பாட்டை பதிவு செய்தல் அல்லது வேதனக் கொடுப்பனவின்மையை பெற்றுக் கொடுத்தல் மற்றும் புலம்பெயர் பணியாளர்களுக்கு சேவைகளை வழங்கும் சட்ட உதவிச் சேவை வழங்குநர்களை ஒழுங்கு பண்ணுதல் போன்றவற்றைக் கையாள்வதில் பயிற்சியளித்தல்.

    - இடரில் சிக்கியிருக்கும் மற்றும் தப்பிச் செல்ல வழியில்லாத அல்லது தப்பிச் செல்ல எத்தனிக்காத வீட்டுப் பணியாளர்களை கண்டறிகின்ற ஓர் முறையை

உருவாக்குதல். அவசியமாக இருக்கும் பட்சத்தில் உள்@ர் சட்டத்தை அமுலாக்கும் பிரிவினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல்.

  - இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகத்தை உதவிக்காக முன்னர் தொடர்பு கொண்ட வீட்டுப் பணியாளர்களது நலன்களைக் கிரமமாக சோதித்தறிவதற்கு ஓர் முறைமையை விருத்தி செய்தல்.

- **சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சிய அரசாங்கங்களுடன் ஒத்துழைத்து பரஸ்பரம் அங்கீகரிக்கப்படக் கூடியதும் நடைமுறைப்படுத்தக் கூடியதுமான தொழில் ஒப்பந்தங்களையும் மற்றும் முறையிடும் பணியாளர்களுக்கு நிவாரணத்தை உறுதி செய்யும் பொறிமுறைகளையும் உருவாக்குதல் வேண்டும்.**

- **வீட்டுப் பணியாளர்களுக்கான புறப்படுதலின் முன்னதான தற்போதைய பயிற்சித் திட்டத்தை கீழ்வரும் ஆலோசனைகள் மூலம் மேம்படுத்தல் வேண்டும்:**

  - பயிற்சியில் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அந்நிய மொழிப் பயிற்சிக்கான பகுதிகளை அதிகரித்தல்.

  - வேலை கொள்ளும் நாடுகளில் மற்றும் அதேபோன்று இலங்கை திரும்பிய பின் வேலை கொள்வோர் மற்றும் தொழில் முகவர்களுக்கெதிராக எவ்விதம் வழக்குகளைக் கொண்டு செல்வது போன்ற நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும் பொறிமுறைகள் பற்றிய கூடுதலான மேலதிக தகவல்களை அளித்தல்.

  - ஆட்சேர்ப்பிற்கான கட்டணங்களின் சட்டபூர்வமான வரம்புகள் பற்றிய தகவல்களை வழங்குவதுடன் சட்டத்தை மீறும் ஆட்சேர்ப்பு முகவர் மற்றும் துணை முகவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் பொறிமுறைகள் பற்றிய தகவல்களையும் வழங்கல்.

  - புலம்பெயர்ந்து செல்லப் புறப்படும் வீட்டுப் பணியாளர்களுக்கு அவர்களது வேலை கொள்வோரது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள்; இலங்கைத் தூதரகத்தின் முகவரி, தொலைபேசி இலக்கங்கள், வேலை கொள்ளும் நாட்டின் தொழில் முகவரது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள்; முன்-ஒழுங்கு நிரல்படுத்தப்பட்ட இலங்கைத் தூதரகத்தின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் ஏதேனும் உதவி மையங்களின் தொலைபேசி இலக்கங்களைக் கொண்ட ஓர் தொலைபேசி அட்டை; உள்@ர் நாணயத்தில் ஓர் குறித்த தொகையிலான பணம், கடவுச்சீட்டின் ஓர் பிரதி மற்றும் அவர்களது தொழில் ஒப்பந்தத்தின் ஓர் பிரதி என்பவை அடங்கிய தகவல் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்தல்.

- **முறைப்பாட்டு பொறிமுறைகள் பற்றி பரந்தளவில் தகவல்களை பரப்புரைத்தல் மற்றும் இடர்பட்டு நாடு திரும்பும் புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்களுக்கு உளவளத்துணை வழங்குதல் உட்பட புலம்பெயர்ந்து திரும்பும் வீட்டுப் பணியாளர்களுக்கான சேவைகளை மேம்படுத்தல்.**

  - வீட்டுப் பணியாளர்கள் இலங்கை திரும்பியதும் துஷ்பிரயோகங்களுக்கான முறைப்பாடு செய்யவும் மற்றும் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உள்ள பொறிமுறைகள் பற்றிப் பகிரங்கப்படுத்துதல் சிறந்ததாகும். மீள்திரும்பும் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கு சர்வதேச விமான நிலையத்தில் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவி வழங்கும் பாதுகாப்பிடத்தில் முறைப்பாடு செய்யும் மற்றும் நிவாரணம் பெறும் பொறிமுறைகள் பற்றி விரிவான தகவல்களை வழங்குதல்.

  - சர்வதேச விமான நிலையத்திலும் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவி வழங்கும் பாதுகாப்பிடத்திலும், மீள்திரும்பும் பணியாளர்களின் முறைப்பாடுகளை தொடர்ச்சியாகவும், தீவிரமான முறையிலும் பதிவு செய்யவும். மீள்திரும்பும் பணியாளர்களிடம் மோசமான வேலை கொள்வோர் மற்றும் தொழில் முகவர்கள் தொடர்பாக தகவல்களைக் கேட்டறிதல் மற்றும் இத்தகவல்களை, குறிப்பாக வீட்டுப் பணியாளர்களது உரிமைகள் தொடர்பாக செயலாற்றும் சிவில் சமூக ஸ்தாபனங்களுக்குக் கிடைக்கும் வகையில் பகிரங்கப்படுத்தல். நிரூபிக்கப்பட்ட மோசமான வேலை கொள்வோர் மற்றும் ஆட்சேர்ப்பு முகவர்களை கறுப்புப் பட்டியலில் குறித்து வைத்திருத்தல்.

  - இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவி வழங்கும் பாதுகாப்பிடத்தில் மீள்திரும்பும் புலம் பெயர்ந்த பணியாளர்களுக்கு உளவளத்துணை வழங்கல்.

  - மீள்திரும்பும் வீட்டுப் பணியாளர்களுக்கு, உளவளத்துணை மற்றும் மருத்துவப் பராமரிப்புச் சேவைகள், தொழில் முகவர்கள் அல்லது வேலை கொள்வோருக்கெதிராக வழக்குகளைத் தொடர விரும்பும் வீட்டுப் பணியாளர்களுக்கான சட்ட உதவிகள் மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்கான மீள்திரும்பலின் பின்னதான பொருளாதார மற்றும் மீள் ஒருங்கிணைத்தலுக்கான உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் பற்றிக் குறிப்பிடும் தகவல்களை விநியோகித்தல்.

- **புலம்பெயர்ந்து செல்ல எண்ணியிருக்கும் பெண்களுக்க ஏதேனும் மருத்துவச் சோதனைகள் அல்லது கருத்தடை மருந்து வகைகள் வழங்குவதை சுயவிருப்பிலும் மற்றும் அறிவிக்கப்பட்ட சம்மதத்துடனும் நிறைவேற்றுவதை உறுதி செய்தல். புலம்பெயர்ந்து செல்ல எண்ணியுள்ள பெண்கள் அவர்களது மருத்துவப் பரிசோதனைகளின் முடிவுகளைப் பெற்றுக் கொள்வதையும், அந்த மருத்துவத் தகவல்களின் இரகசியத்தன்மை மதித்து பேணப்படுவதையும் உறுதி செய்தல்.**

- **புலம்பெயர எண்ணியிருக்கும் வீட்டுப் பணியாளர்களுக்கு தொழில் முகவர்களது கடப்பாடுகள் மற்றும் ஆட்சேர்ப்பு முகவர்கள், துணை முகவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யும் பொறிமுறைகள் பற்றிய தகவல்களை பரப்புரை செய்யும் பொது விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை விரிவாக்கல்.**

- புலம்பெயர்வதற்கு எண்ணும் வீட்டுப் பணியாளர்கள் உள்ள கிராமங்கள் மற்றும் உள்@ர் இடங்கள் (உதாரணம்: ஆடைத் தொழிற்சாலைகள், தேயிலைத் தோட்டங்கள்) என்பவற்றை இலக்கு வைத்து அவர்களுக்கு ஆட்சேர்ப்புக் கட்டணங்கள் மீதான சட்ட வரம்புகள், வேலை கொள்ளும் ஒவ்வோர் நாட்டிற்குமான தொழில் ஒப்பந்த விதிகள், குறைந்த வட்டி வீதத்தில் கிடைக்கும் கடன் வசதிகள் மற்றும் சட்டத்தை மீறும் ஆட்சேர்ப்பு முகவர்கள் மற்றும் துணை முகவர்களுக்கெதிராக முறைப்பாடு செய்யும் பொறிமுறைகள் பற்றி அறிவுறுத்தல்.

- புலம்பெயர்வோர் உரிமைகளுக்கான அமைப்புகளுடன் இணைந்து புலம்பெயர்வதற்கு எண்ணும் வீட்டுப் பணியாளர்கள் புலம்பெயர்வதற்குத் தீர்மானத்தை மேற்கொண்டு ஓர் தொழில் முகவரை நாடுவதற்கு முன்னர் இந்தத் தகவல்களை அவர்களுக்கு கிடைக்கச் செய்தல்.

- **அதிக வட்டி வீதத்தில் கடன்களை வழங்கும் தனியார் கடன் கொடுப்போரிற்கு மாற்று வழியாக புலம்பெயரும் பெண்களுக்கு அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கடன் வசதிகளை அதிகரித்தல்.**

  - இந்தத் திட்டங்கள் குறைந்த வட்டி வீதத்தையும், நீண்ட மீள்செலுத்தும் காலத்தையும் கொண்டிருப்பதனை உறுதி செய்தல்.

  - புலம்பெயரும் பெண் தொழிலாளர்களுக்கான கடன் உத்தரவாதம் மற்றும் பிணை உறுதிகளின் தேவைப்பாட்டை மட்டுப்படுத்தல்.

  - நடைமுறையிலுள்ளதும் மற்றும் புதிய கடன் திட்டங்கள் பற்றி விளம்பரப்படுத்துதலும் நன்மையானது.
  - இலங்கை வர்த்தக அமைச்சின் இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (SLECIC) வங்கி உத்தரவாதத் திட்டம் பற்றிய மக்கள் விழிப்புணர்வை அதிகரித்தல்.

- **வீட்டுப் பணியாளர்களுக்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தொழிலாளர் நலன்புரி நிதியக் காப்புறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி விளம்பரப்படுத்துதல் நன்மையானது.**

  - தொழில் ரீதியிலான விபத்து, அங்கவீனமடைதல் மற்றும் இறப்பு என்பவற்றுக்கப்பால் உடல் ரீதியான மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களினாலான கேடு மற்றும் மீள்திரும்புவதற்கான விமானக் கட்டணங்கள் என்பவற்றையும் உள்ளடக்கத்தக்க வகையில் காப்பீட்டை மேலும் விரிவுபடுத்தல்.

  - இக்காப்புறுதித் திட்டத்தின் கீழான நன்மைகள் பற்றிப் புலம்பெயர் பணியாளர்களுக்குத் தெளிவான தகவல்களை அளித்தல். ஆட்சேர்ப்பு முகவர்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் மற்றும் சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் மற்றும் உள்வரும் வீட்டுப் பணியாளர்களிடையில் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவி வழங்கும் பாதுகாப்பிடம் போன்றவற்றில் புலம்பெயர எண்ணும் வீட்டுப் பணியாளர்களுக்கு இத்தகவல்களை விநியோகித்தல்.

- புலம்பெயரும் பணியாளர்களது காப்புறுதியின் செல்லுபடியாகும் காலத்தை ஆறு மாதங்களில் இருந்து தொழில் ஒப்பந்த காலம் முழுவதுக்கும் பொருந்தும் வகையில் நீடித்தல். துஷ்பிரயோகம் நடைபெறுமாயின் அச்சந்தர்ப்பத்தில் மீள்திரும்புவதற்கான விமானக் கட்டணத்திற்கான செலவுகளை மீளப் பெறுதலையும் உள்ளடக்கும் வகையில் காப்புறுதித் திட்டம் இருப்பதனை உறுதி செய்தல்.

- **கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் அமுல்படுத்தலில் புலம்பெயர்வோர் உரிமைகளுக்கான அமைப்புக்களின் யோசனைகளை ஆர்வத்துடன் வரவேற்றல்.**

  - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சபையில் புலம்பெயர்ந்த மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் உரிமைகள் எடுத்துரைக்கப்படுவதை உள்ளடக்கல்.

  - புலம்பெயர் பணியாளர்களது குடும்பங்களின் தேவைகளை இனம் கண்டு, கவனம் கொள்வதற்கும் மற்றும் புலம்பெயர் பணியாளர்களது குடும்பங்களுக்கான ஆதரவை நல்கும் செயல் திட்டங்களை விருத்தி செய்வதற்குமான சமூக சேவைத்திட்டங்களை உருவாக்குவதற்கு ஏதுவாக புலம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்தோர் உரிமைகளுக்கான அமைப்புக்கள் மற்றும் அக்கறை கொண்டோருடன் கலந்தாலோசித்தல்.

- **பறிமுதல் செய்யப்பட்ட கடவுச்சீட்டுக்களுக்கான மீள்வழங்குதல்Æபதிலாக வழங்குதல் கட்டணமான ரூபா 10,000-ஐ இல்லாதொழித்தல்.**

  - வெளிநாட்டில் இருக்கையில் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் அவர்கள் செய்யாத தவறுகளுக்காக கடவுச்சீட்டுக்களை இழந்தவர்களுக்கு (உதாரணம்: வேலை கொள்வோரால் கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில்) புலம்பெயர் பணியாளர்களுக்கான கட்டணத்தைக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இல்லாதொழிக்க வேண்டும்.

**சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியத்தின் அரசாங்கங்களுக்கு:**

- **கீழ்வரும் விடயங்களில் இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவும்:**

  - தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைப் பிரசைகள் பற்றி இலங்கைத் தூதரகங்களுக்குத் தாமதமின்றி அறிவிப்பதற்கு;

  - பரஸ்பரம் அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படக் கூடிய ஒப்பந்தங்களை உருவாக்குவதற்கு;

  - வேதனக் கொடுப்பனவின்மை, ஏனைய தொழில் துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றவியல் முறைப்பாட்டுச் சந்தர்ப்பங்களில் முறைப்பாடு செய்யக் கூடியதான பொறிமுறைகள் மற்றும் நிவாரணங்களுக்கான வழிவகைகளை உருவாக்குவதற்கு;

  - புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களை தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் அல்லது பணியாளர்கள் மீள்திரும்புவதற்கு அல்லது வெளியேற்றப்படுவதை தீர்மானிக்கும் வரை தடுத்து வைக்கப்படும்

காலத்தைக் குறைப்பதற்காக இலங்கைக்கு மீள் திரும்ப விரும்பின் அவர்களை விரைவாக திருப்பி அனுப்புவதற்கு ஏதுவாக வெளிநாட்டுப் பணியகத்துடன் ஒப்பந்தங்களை உருவாக்குவதற்கு;

- துஷ்பிரயோகத்திற்குள்ளான வீட்டுப் பணியாளர்களைக் காப்பாற்றவும் மற்றும் அவர்களது துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரிப்பதற்குமான பொறிமுறைகளை உருவாக்கல். உள்@ர் அதிகாரிகளுடன் இணைந்ததாக இலங்கை வெளிநாட்டுப் பணியகம் வேலைத்தலங்களில் திடீர் சோதனைகளை நடாத்தவும், பணியாளர்களின் எஜமானர்களின் வீடுகளுக்குச் சென்று இடர் நிலையிலுள்ள இலங்கை வீட்டுப் பணியாளர்களை கூட்டி வருவதற்குமான வசதிகளை அளிப்பதற்கு.

- **புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்களுக்க சமத்துவமானதும், விரிவானதுமான சட்டப் பாதுகாப்பை வழங்குதல்.**

  - பணியாற்றும் நேரம், வேதனக் கொடுப்பனவுகள், சம்பளக் கழிவுகள், ஓய்வு நாட்கள், வேதனத்துடன் கூடிய விடுமுறை நாட்கள் மற்றும் தொழிலாளர் நட்டஈடு உட்பட ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சட்டப் பாதுகாப்பை வீட்டுப் பணியாளர்களுக்கும் சமத்துவமாக வழங்கும் வகையில் தொழில் சட்டங்களை மீளமைத்தல்.

  - சவூதி அரேபியா, குவைத் மற்றும் ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பவற்றில் புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்களது நலன்கள் சம்பந்தப்பட்ட பொறுப்புக்களை உள்நாட்டு அமைச்சிலிருந்து தொழில் அமைச்சிற்கு மாற்றுதல்.

  - புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் நாட்டிற்குள் அனுமதிக்கப்படவும் மற்றும் பணியாற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்படுவதற்குமான நிபந்தனையாக கர்ப்பப் பரிசோதனை நடாத்துவதை நிறுத்துவதுடன் இனவிருத்தி அந்தஸ்திலான அடிப்படையின் பேரில் பாரபட்சங் காட்டும் குடிவரவுச் சட்டங்களை நீக்குதல்.

- **அனுசரணையாளரை மாற்றுவதற்கு அல்லது வேலை கொள்ளும் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு வேலை கொள்வோரின் அனுமதி தேவைப்படும் அனுசரணையளிப்புச் சட்டத்தை சீர்திருத்தல்.**

  - அனுசரணையளிப்பை மாற்றுவதற்கு வசதியளித்தல், உதாரணத்திற்கு வேலை கொள்வோர் குறித்துப் பிரத்தியேகமாகக் குறிப்பிடாமல் தற்காலிக தொழில் அடிப்படையிலான விசா அனுமதியளித்தல், இதன் மூலம் பணியாளர்கள் வேலை கொள்ளும் நாட்டில் சட்ட அந்தஸ்தை இழக்காமல் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்து இடம்மாறி மற்றொருவரிடம் பணி செய்ய முடியும்.

  - நாட்டிற்குத் திருப்பியனுப்புதல் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் அல்லது பணியாளர் இலங்கைக்கு மீள் திரும்புவதற்கு விருப்பப்படின், வெளியேறுவதற்கான விசா அனுமதியில் அனுசரணையாளரின் சம்மதத்தின் தேவையினை இல்லாதாக்கி புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் விரைவாக நாடு திரும்புவதற்கு வசதியளித்தல்.

- **நடைமுறையிலுள்ள தேசிய சட்டங்களை மீறி வீட்டுப் பணியாளர்களை மோசமாக நடாத்தும் வேலை கொள்வோர் மற்றும் தொழில் முகவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தல்.**

    - வீட்டுப் பணியாளர்களுக்கெதிராக உடல் ரீதியானதும் பாலியல் ரீதியிலானதுமான வன்முறைகள் புரிவோரை விசாரித்து, வழக்குத் தொடுத்துத் தண்டித்தல்.

    - நடைமுறையிலுள்ள தேசிய சட்டங்களை மீறும் கட்டாய வேலை மற்றும் ஏனைய தொழில் உரிமைத் துஷ்பிரயோகங்கள் மேற்கொள்வோரை விசாரித்து, வழக்குத் தொடுத்துத் தண்டித்தல்.

- **வீட்டுப் பணியாளர்களுக்கு நீதி முறைமைகளை அணுகுவதற்கான வழிமுறைகளை அதிகரித்தல்**

    - வீட்டுப் பணியாளர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களை இனங்கண்டு விசாரிப்பதற்கான பயிற்சியைப் பொலிசாருக்கு வழங்குதல் மற்றும் அவ்விதமான சந்தர்ப்பங்களில் எவ்விதம் பதில் விளைவைக் காட்டுவது என்பதிலான நடைமுறை ஒழுங்குகள் மற்றும் பொருத்தமான சிபாரிசுகளை வழங்குதல். வீட்டுப் பணியாளர்களின் இஷ்டத்திற்கெதிராக அவர்களை மோசமான முறையில் நடாத்தும் வேலை கொள்வோரிடம் வீட்டுப் பணியாளர்களைத் திரும்பவும் அனுப்பாதிருப்பதன் முக்கியத்துவம் பற்றி பொலிசார் மற்றும் குடிவரவு அதிகாரிகளுக்கு அறிவூட்டுதல் என்பதுடன் வேலை கொள்வோர் மற்றும் தொழில் முகவர்களுக்கெதிராக முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான செயல்முறைகளில் பரிச்சயம் கொண்டவர்கள் என்பதை உறுதி செய்தல்.

    - தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைப் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் தங்கள் நாட்டுத் தூதரக அதிகாரிகளைச் சந்திப்பதற்கான அவர்களது உரிமைகள் பற்றி உடன் அறிவிப்பதுடன் அவ்விதம் செய்வதற்கான வசதிகளுக்கு வழிசெய்து கொடுத்தல்.

    - வீட்டுப் பணியாளர்கள் துஷ்பிரயோகம் மேற்கொண்ட வேலை கொள்வோருக்கு எதிராக நிவாரணங்களைக் கோரி நடவடிக்கைகள் எடுக்கையில் அவர்கள் வேலை கொள்ளும் நாட்டில் இருப்பதற்கான விசா அனுமதிகளை கிடைக்கச் செய்தல். இந்த விசா அனுமதிகளுக்காக வீட்டுப் பணியாளர்களிடம் கட்டணம் அறவிடல் கூடாது, வழக்கு நடைபெறும் காலப்பகுதி வரை பணியாளர்களை தடுப்பு முகாம்களில் தங்குமாறு அல்லது தங்குமிடங்களில் அடைபட்டிருக்குமாறு பலவந்தப்படுத்தல் கூடாது.

- **புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் மீதான துஷ்பிரயோகங்களை கண்காணித்து பதில் கூறுவதற்கான பொறிமுறையை உருவாக்கி பின்வரும் முறைகள் மூலம் மேம்படுத்தல்:**

    - வேதனக் கொடுப்பனவின்மை, ஏனைய தொழில் துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றவியல் முறைப்பாட்டுச் சம்பவங்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகள் மற்றும் முறைப்பாடு செய்யும் பொறிமுறைகள் என்பவற்றை உருவாக்கல்.

- ○ வேலைத்தலங்களைக் கிரமமாக பரிசோதித்தல். வேலை கொள்வோரிற்கெதிராக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற வீடுகளுக்கு விஜயங்களை மேற்கொண்டு, இக்கள விஜயங்களின் போது புலம்பெயர்ந்து வந்து வீட்டுப் பணிபுரிபவர்களை தனிப்பட்ட முறையில் நேர்காணல்.

- ○ சட்டத்தை மீறும் பிரசைகள் மற்றும் பிரசைகளல்லாத வேலை கொள்வோர் மற்றும் தொழில் முகவர்கள் மேல் நியாயமான அபராதத்தை விதித்தல். தேவையேற்படின் இலங்கை வெளிநாட்டுப் பணியகத்துடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

- **நாட்டில் உள்நுழைவதற்கும், பணி செய்வதற்குமான அனுமதிக்கு ஓர் நிபந்தனையாக புலம் பெயர் வீட்டுப் பணியாளர்கள் மீதான கட்டாய எச்.ஐ.வி பரிசோதனைகளின் தேவைக்கான கொள்கைகளை இல்லாதொழித்தல்.**

- **அனைத்துப் புலம்பெயர்ந்த பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களது உரிமைகளைப் பாதுகாக்கும் உடன்படிக்கையை (புலம்பெயர் தொழிலாளர் உடன்படிக்கை) மற்றும் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் (ILO) உடன்படிக்கைகளை ஏற்று சட்ட அங்கீகாரம் வழங்குதல். உடன்படிக்கையின் பிரகாரம் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுடன் இணங்குதல்.**

- **ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர்ந்தோரின் மனித உரிமைகள் மீதான விசேட தொடர்பாட்டாளரை நாட்டிற்கு விஜயம் செய்து புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் நிலைமைகளை அவதானிக்கும்படி அழைப்பு விடுத்தல்.**

**சர்வதேச தொழில் ஸ்தாபனத்திற்கு (ILO):**

- வீட்டுப் பணியாளர்களுக்கான ஓர் மாதிரி தொழில் ஒப்பந்தத்தை வழங்குதல். இந்த மாதிரி தொழில் ஒப்பந்தத்தை அரபு மொழி, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்து புலம்பெயர எண்ணுபவர்களுக்கு இலகுவாக கிடைக்கும் வண்ணம் செய்தல்.

- சர்வதேச தொழில் ஸ்தாபன நியமங்கள் தொடர்பாக புலம்பெயர் பணியாளர்களுக்கு தொழில் உரிமைகள் அடிப்படையிலான கல்வியை வழங்கும் உள்@ர் அமைப்புக்களுடன் இணைந்து தொழில்நுட்பத் திட்டங்களை விரிவாக்குவதற்கு பணியாற்றல்.

- சர்வதேச தொழில் நியமங்களுக்கேற்ற உறுதியான வகையில் தொழில் கட்டுப்பாடுகள் மற்றும் அமுலாக்கல்களை வலுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப மற்றும் மொழி பற்றிய உதவிகளை வழங்குவதற்கு அரசாங்கங்களுடன் பணியாற்றல்.

**புலம்பெயர்ந்தோர் மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தொடர்பாட்டாளருக்கு:**

- சர்வதேச சட்டத்தின் கீழ் புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களது உரிமைகளைச் சித்தரித்துக் காட்டுதல் உட்பட புலம்பெயர் வீட்டுப் பணியாளர்கள் அனுபவிக்கும் நிலைமைகள் மீதானதோர் விசேட அறிக்கையை வெளியிடல்.

- இலங்கை, சவூதி அரேபியா, குவைத், லெபனான் மற்றும்Æஅல்லது ஐக்கிய அரபுகள் இராச்சியம் என்பவற்றுக்கு புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களது நிலைமைகளைக் கண்டறிந்து விசாரிப்பதற்கான விஜயங்களை மேற்கொள்வதுடன் சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளையும் வழங்குதல்.

**ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் (JICA), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), உலக வங்கி, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் (USAID) மற்றும் சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்திக் கூட்டுறவு முகவர் (SIDA) உட்பட்ட சர்வதேச நன்கொடையாளர்களுக்கு:**

- புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கான ஆலோசனை முயற்சிகள் மற்றும் சேவைகளுக்காக உள்@ர் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய சிவில் சமூகங்களுக்குக் கூடுதலான நிதி மற்றும் நிறுவன ரீதியிலான ஆதாரத்தை வழங்குதல்.

- புலம்பெயர்வதற்கு எண்ணும் பெண்களுக்கு புலம்பெயர்தலுக்கான செலவுகளை தாங்கக் கூடிய வகையில் மிகவும் சாதகமான வட்டி வீதத்திலான சிறுகடன் திட்டங்களுக்கு கூடுதல் நிதி வழங்கல்.

- இலங்கையில் நிலையான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் செயல் திட்டங்கள் அத்துடன் பெண்கள் மற்றும் யுவதிகளுக்கான தொழில் பயிற்சி, தொழில்நுட்பத் திறன் பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சி போன்ற பெண்களுக்கான உள்@ர் தொழில் உபாய மார்க்கங்களுக்காக நீண்டகால அடிப்படையில் நிதி வசதியளித்தல்.

- மீள்திரும்பிய புலம்பெயர்ந்த பெண்கள் நிலையான சுயதொழில்களாக சிறுதொழில் செயல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான சிறுகடன் திட்டங்களுக்கு நிதி வசதியளித்தல்.